SNS academy
a fingerprint school
*Sincerity, Nobility and Service*

வகுப்பு : 5 **மாதத் தேர்வு - ஜூன்** மதிப்பெண்கள் : 30

தேதி : 25.6.19 **பாடம் : தமிழ்** கால அளவு : 1-மணிநேரம்

**I. பத்தியைப் படித்து விடையளி:** (5)

தமிழர்களின் முக்கிய பண்டிகை பொங்கல் பண்டிகை ஆகும். இது தமிழர்களின் முதல் பண்டிகை என்றும் கூறுவர். “உழவுத் தொழிலுக்கு” நன்றி தெரிவிப்பதே இப்பண்டிகையின் நோக்கம் ஆகும். முற்காலத் தமிழர்களின் முதல் மாதமாக தை மாதம் இருந்ததாகவும், அதன் வருடப் பிறப்பான தை முதல் நாளே பொங்கல் பண்டிகையாகக் கொண்டாடப்பட்டதாக நமது வரலாறு கூறுகிறது

**வினாக்கள்**

1. தமிழர்களின் முக்கிய பண்டிகை எது?
2. பொங்கல் பண்டிகையின் நோக்கம் என்ன?
3. முற்காலத் தமிழர்களின் முதல் மாதம் எது?
4. பொங்கல் பண்டிகை எந்த நாள் கொண்டாடப்பட்டது?
5. பத்திக்கு ஏற்ற தலைப்பு எழுதுக.

**II. கோடிட்ட இடங்களை நிரப்புக:** (3)

6. உயிர்மெய் எழுத்துகள் மொத்தம் ___________
7. உயிர்நெடில் எழுத்துகள் _______________
8. ய்ர்ல்வ்ழ்ள் என்னும் ஆறும் __________ எழுத்துகள்.

**III. வாக்கியத்தில் அமைத்து எழுதுக.** **(2)**

9. நிலா 10. வெற்றி .

**IV. முதல் எழுத்தை மாற்றி புதிய சொற்கள் உருவாக்குக.** (2)

11. பத்து _____ ______ 12 . கால் _____ ______

**V. பொருத்துக.** (6)

| | | |
|---|---|---|
| 13. பெருந்தலைவர் | - | மகாத்மா காந்தி |
| 14. பேரறிஞர் | - | பாரதியார் |
| 15. கப்பலோட்டிய தமிழன் | - | காமராசர் |
| 16. தேசத்தந்தை | - | பெரியார் |
| 17. பகுத்தறிவுப் பகலவன் | - | அண்ணா |
| 18. மகாகவி | - | வ. உ.சிதம்பரனார் |

**VI. பொருள் தருக:** (2)

19. அகிலம் - 20. கழை -

**VII. பிரித்து எழுதுக:** (2)

21. குளிரிளநீர் -

22. நற்பண்பு -

**VIII. எதிர்ச்சொல் எழுதுக.** (2)

23. உயர்ந்தது X

24. அறிவாளி X

**IX. விடை தருக:** (6)

25. பாரதிதாசன் எவற்றையெல்லாம் இனிமையெனக் கூறுகிறார்?

26. அறிவால் உயர்ந்த தலைவர்கள் நால்வரின் பெயர்களை எழுதுக.

27. பாரதியார் எழுதிய நூல்கள் நான்கினை எழுதுக.